# பாலியர்  நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௨ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௫ ௵ வைகாசி ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். [சங்கியை, ௫.


### பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | | சி. | ௧. |
| ஒரேமுறையில் ௧௦ | " | " | " | ௬ |
| ௨௦ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௪ |
| ௫௦ | " | " | " | ௪௦ |
| ௧௦௦ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

### Subscriptions and Donations.

| 1864. | s. | d. |
|---|---|---|
| Mr. S. Nathaniel - - | 1 | 0 |
| " S. Williams - - | 1 | 0 |
| Messrs. Dana and Winslow - | 9 | 0 |
| **1865.** | | |
| H. Pole, Esq. - - - | 3 | 0 |
| Dr. Samuel Strong - - - | 1 | 0 |
| Mr. J. S. Vesuvasingam - - | 1 | 8 |
| " R. David - - - - | 1 | 6 |
| " W. H. Pereru - - - | 2 | 0 |
| Manepy Y. C. A. - - - | 1 | 0 |
| Collection at the 2nd Annual meeting of Y. C. Associations. | 9 | 4 |

### இளைஞர் கிறிஸ்த சங்கம்.

இச்சங்கத்தின் இரண்டாம் வருடாந்தக்கூட்டம சித்திரைமாதம் ௰௬ந் திகதி உடுவில் மிஷன் தேவாலயத்தில் வைக்கப்பட்டது. அவ்வேளையில் கனம். கௌலன் (Rev. W. W. Howland) ஐயர் சபாநாயகமாயிருந்து கூட்டம்நடத்தினர். ஒரு ஞானகீதம்பாடித் தேவவசனம் வாசித்துப் பிரார்த்தனைபண்ணியபின், எழுத்துக்காரியஸ்தன் எரேமியா சென்ற வருஷாந்தக் கூட்ட வரலாற்றையும், சங்கத்தின் அறிக்கைப் பத்திரத்தையும் பொக்கிஷகாரன் உவில்லியம் பவுல் (W. Paul) சங்கவரவின் செலவுகளையும் வாசித்தார்கள். ஓர் ஞானகீர்த்தனை பிள்ளைகளாற் பாடப்பட்டது. திரும்ப முறையே பிள்ளைகளின் வாழ்வுதாழ்வுகளுக்குப் பொறுப்பாளிகள்ஆர் என்பதின்பேரில், கனம். ஸ்போல்டிங் ஐயர் (Rev. L. Spaulding. D. D.) ஓர் பேச்சுப்பேசிவிவரித்ததின்மேல், யெருஷலேம் பட்டினத்தைப்பற்றி கொருநேலியு (E. Cornelius) வினல் ஒருவாசகமும், லோறென்சுவினல் (H. Lawrence) ஓர் பேச்சும் வாசித்துப் பேசிமுடியப் பிள்ளைகளால் ஓர்கீர்த்தனை பாடப்பட்டது. பின் கிறிஸ்துவே அரசர், என்பதன்பேரில் ரோப்ஸ் (S. Ropes) ஒருபேச்சுப்பேசியதின்மேல், கர்த்தர் ஒருவரே என்பதைப்பற்றி உவைமன் (Samuel Wyman) ஓர்வாசகம் வாசித்தார். அதன்பின் தருமஞ் செய்தலைப்பற்றி கிறக்கொறி (R. Gregory) வாசகம் வாசிக்க ஞானகீர்த்தனை பாடப்பட்டது. திரும்பச் சங்கத்தில் நடந்தவைகள் தமக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது என்றுசொல்லி, சங்கத்தாருக்குத் தைரியமாய்ச் சில குறிப்புகளை விற்ச (J. Fitch) என்பவர் பேச, கொருநேலியு போதகர், ஸ்போல்டிங் ஐயர் முதலானவர்கள் சில நல்ல குறிப்புகள் சொன்னார்கள். அதன்மேல் ஸ்தோத்திர கீதம்பாடிப் பணஞ் சேகரித்து முடியவே ஸ்போல்டிங் ஐயர் தேவாசீர்வாதஞ் சொல்லக் கூட்டம் முடிந்தது.

### சங்கத்தின் அறிக்கைப் பத்திரம்.

#### மானிப்பாய்.

இச்சங்கத்தைச்சேர்ந்தோர் இருபது. ஒருஆள் சென்றவருஷம் மரித்துவிட்டது. கூட்டம் கிழமைதோறும் வைக்கப்படும். பிரயோசனத்தைக் கொடுக்கக்கூடிய நயந்தகாரியங்கள் கூட்டங்களில் நடக்கும். சங்கத்தின் காரியங்கள் மிக முயற்சியுடன் சென்றவருஷத்தில் நடந்தன.

#### வட்டுக்கோட்டை.

இதைச்சேர்ந்தோர் நூற்றுப்பத்து. ஒருஆள் சென்றவருஷம் மரித்துவிட்டது. படிப்புக்குரிய அப்பியாசங்கள் கூட்டங்களில் நடக்கும்.

#### தெல்லிப்பழை.

இதைச்சேர்ந்தோர் நாற்பத்தேழு. மிகுந்தமுயற்சிகொண்டு சங்கத்தின் உத்தியோகஸ்தர் காரியங்களை நடத்தினார்கள்.

#### உடுவில்.

இதைச்சேர்ந்தோர் நூற்றைம்பத்தொன்பது. இதற்குச்சிலநன்கொடைகொடுத்திருக்கிறார்கள் சென்றவருஷம் முயற்சியாய் நடத்தப்பட்டது.

#### பண்டத்தரிப்பு.

இதைச்சேர்ந்தோர் முப்பத்துமூன்று. சென்றவருஷம் நடந்தயாவும் தைரியத்திற் கிடமாயிருந்தது. இப்படிக்கு,

எழுத்துக்காரியஸ்தன் எரேமியா.

௲௮௱௬௰௫ ௵ இளைஞர்கிறிஸ்தசங்கத்தின் வரவு.

| | ப. | சி. | பெ. |
|---|---|---|---|
| மானிப்பாய் - - - | " | ௧௭ | ௬ |
| வட்டுக்கோட்டை - | " | ௪௦ | ௬ |
| தெல்லிப்பழை - - - | ௬ | ௭ | ௦ |
| பண்டத்தரிப்பு - - | ௧ | ௨ | ௨௫ |
| நவாலி - - - | " | ௫ | ௦ |
| உடுவில் - - | ௧௬ | ௧௮ | ௮௭ |
| மொத்தம். | ௨௨ | ௦ | ௪௦ முக்கால் |

| செலவு. | ப. | சி. | பெ. | ப. | சி. | பெ. |
|---|---|---|---|---|---|---|
| மானிப்பாய் பாலியர்நேசனுக்கு | | | | " | ௧௬ | ௦ |
| வட்டுக்கோட்டை " | | | | " | ௪௦ | ௦ |
| தெல்லிப்பழை " | ௧ | ௬ | ௦ | | | |
| " மற்றுஞ்செலவுகள் | " | ௨ | ௦ | ௧ | ௧௧ | ௦ |
| பண்டத்தரிப்பு பாலியர். | " | ௧௫ | ௦ | | | |
| " மற்றுஞ்செலவுகள் | " | ௧ | ௨௭ | " | ௧௬ | ௨௭ |
| உடுவில் பாலியர்நேசன். | ௧ | ௭ | ௦ | | | |
| மற்றுஞ்செலவுகள் | " | ௫ | ௬ | ௧ | ௧௨ | ௬ |
| மொத்தம். | | | | ௫ | ௫ | ௫௭ |
| கையிருப்பு. | | | | ௧௬ | ௧௫ | ௫ |
| | | | | ௨௨ | ௦ | ௪௦௭ |

பொக்கிஷகாரன் உவில்லியம் பவுல்.

### சம்பூரணமரணசாதனப்பொருள்.

பின்வருங்கடிதம் மிகவும் மனதை உருக்கத்தக்கதும் வெருடைய கண்களிலிருந்தும் கண்ணீர் வடியப்பண்ணத் தக்கதுமான மெய்ச்சங்கதியாயிருக்கின்றது.

ஐயாவே,

இதற்குள் இருநூறு ரூபாய்க்கு ஒருஉண்டியலிருக்கின்றது. யுத்தசேவகத்தில் என்மகன் சேர்ந்திருந்து மரித்துவிட்டதினால் இதற்குள்ளடக்கிய இருநூறு ரூபாயையும் என் மகனுக்கு அரசாட்சியார் ஒரு நன்கொடையாகக் கொடுத்தார்கள். அருமையான எனது பிள்ளை இதிலுதவினுடைய திராட்சத் தோட்டத்தில் பணிவிடை செய்வதற்கு தேவ அருளினால் பக்குவப்படும்பொருட்டு அவன் சென்னதினமுதல் அநேக பிரார்த்தனைகள் செலுத்தப்பட்டன. அவன் வித்தியாசாலையில் அவசியம் கற்கவேண்டிய சில கல்விகளைக் கற்று மனந்திரும்பாதவனாக இராணுவத்திற் சேர்ந்தான். தமது வாக்குகளிலும் உடம்படிக்கைகளிலுந் தவறிப்போகாத தேவன் தமதாவியால் அவனை எவிஇரட்சகருடைய பாகப் பிராயச் சித்தமாகிய அன்பிலே அவன் நம்பிக்கைகொளளும்படி செய்தார். "யேசுக்கிறிஸதுவின் மூலமாக எனது பரமபிதாவுடன் ஒப்புரவாக்கப்பட்டதினால் எனது ஆத்துமா பரிபூரண சமாதானமுஞ் சந்தோஷமுமடைந்திருக்கிற" தென்று மகிழ்ச்சியுடன் தன்வாயால் அறிக்கையிட்டு மரித்தான், இப்பணம் தேவசெயலால் எனதுகையிற் கிடைத்தது. என்மானில் தேவன்காட்டிய கிருபைக்காகவும் சத்தியமார்க்கத்தை இப்பணம் பரப்புவதற்குத் தருந்த எத்தனமொறு ஆசையினாலும் தேவவாக்கை அவசியந் தேவையானவர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு ஏற்ற கருவியாயிருக்குமென்றதினால் அதற்கென்றே எனது பிரார்த்தனையுடன் அதகளிப்பாக நேர்ந்துவிடுகிறேன். இன்னும் எனதுமகன், தேவ ஊழியத்தை நெடுங்காலம் நடப்பித்துப் பரப்புவதிலும் நமது இரட்சகரினது இராச்சியத்தை அதிஸ்தாரமாக்குகிறதற்கு அழிவற்ற வித்தை அழிவுள்ள இப்பொக்கிஷம் பரப்ப ஏதுபண்ணுமென்றும் நம்பி இதைத்தேவதொண்டுக்கென்று கையளிக்கிறேன்.

பிள்ளைகளும் பெற்றாரும் மேற்சொல்லிய கடிதத்தைச் சற்றே உறுதித் தியானிக்கக் கேட்கிறோம். உங்கள் கடமைகள் எவையென்று தனித்தனியே தேர்ந்துபாருங்கள்.

### கடவுளுண்டேன்பதற்குத் திருட்டாந்தம்.

ஒருசீஷன் தனது குருவினிடத்தில்வந்து மூன்று கேள்விகளைக் கேட்டான்.

௧ வது. கடவுள் எங்கும் வியாபித்திருக்கிறாரென்று சொல்லுகிறீரே, அவரை ஒரு இடத்திலும் நான் காணவில்லையே, அவரை எனக்குக் காட்டவேண்டும்.

௨ வது. மனிதன்செய்யுங் கிரியைகள் நன்மையானாலும் தீமையானாலும் கடவுளினாலுண்டாகிறபடியால், குற்றத்துக்கு அவன் தண்டனை அடைவானேன்? கடவுளுடைய சித்தத்துக்கு விரோதமானவைகளை மனிதன் செய்

யக்கூடாதென்றால் அப்பொழுது அவனுக்கு சுயாதீனமில்லையே. சுயாதீனமிருந்தால் சவுக்கியமானவைகளைச் செய்வானேயொழிய தீமையானவைகளைச் செய்யமாட்டானே. அப்படியிருக்க அவன்செய்த குற்றத்துக்குத் தண்டிப்பானேன்?

௬வது. கடவுள் பசாசை அக்கினிச்சுரூபமாகப் படைத்தாரென்றால் நரகாக்கினி பசாசை வாதிப்பதெப்படி? அக்கினி அக்கினியை வாதிக்கக்கூடுமோ? என்றான். குருவானவர் தனது சீஷன் அறியாமையென்னும் அந்தகாரத்தில் அடைக்கப்பட்டிருக்கிறதாகக்கண்டு அவன் புத்தியடையும்படி தமக்கருகிற் கிடந்த மண்ணாங்கட்டியை எடுத்து அவன் தலையிலெறிந்தார். சீஷன் தலையைப் பிடித்துக்கொண்டு ஐயோ, அப்பா என்று குரலையிட்டுக் குருவானவரிடத்தில் எனது சந்தேகத்தைத் தீர்க்கப்போனேன், அவர் என்தலையை உடைத்தாரென்று குளறிக்கொண்டு நியாயஸ்தலத்திற்போய் முறையிட்டான். நியாயாதிபதி குருவையழைப்பித்து விசாரணைசெய்யும்போது குருவானவர் சொன்னது, எனது சீஷன் கேட்டகேள்விகளுக்கு மண்ணாங்கட்டிதான் மறுமொழி என்றார். எப்படியெனில் மண்ணாங்கட்டி தலையிற்பட்டதால் நோவுண்டுபட்டதே. அந்நோவை எனக்குச் சீஷன் காட்டுவானெனில் நானும் தேவனைக் காட்டச் சத்தியுண்டு. நான்செய்யுங் கிரியைகள் கடவுளினாலுண்டாகிறபடியால் என் சுயபுத்தியினால் இவனுக்கு எறியவில்லை. கடவுளினுடைய ஏவலினாலெறிந்தேன். இவன் சரீரம் மண்ணாற் படைக்கப்பட்டபடியால் மண், மண்ணைவாதிக்குமா? ஆகையால் சீஷன் ஏற்படுத்திய வழக்குப் பொய்யாயிருக்கிறதென்று குருவானவர் நியாயங்காட்டி ரூபிக்க தேவகிருபையால் சீஷனின் அறியாமைநீங்கி தெய்வமுண்டென்றுபுத்தியினாலுணரும்படி அடையாளத்தினால் உபதேசித்த குருவை இருவரும் புகழ்ந்து விடைகொடுத்தனுப்பினார்கள்.

## யெருஷலேம்.

சென்ற சங்கியையில் யெருஷலேம் நகரத்தைப்பற்றிச் சிலகாரியஞ் சொன்னோம். இப்பொழுதுஞ் சிலவற்றை இவ்விடத்தில் எழுதுகிறோம். யெருஷலேமை வலியதுருக்கமென்று சொல்வதுண்டு. (௨. சாமு. ௫: ௬, ௮.) இதின் அஸ்திபாரம் முழுவதும் கற்பாரின்மேற் போடப்பட்டிருந்தது. முப்பக்கத்திலும் செங்குத்து மலைகளிருந்தன. அதைச்சுற்றி ஆழியபள்ளத்தாக்கிருந்தது. பள்ளத்தாக்கைச்சுற்றி மலைகளிருந்தன. கிழக்கேயும் மேற்கேயுமிருக்கப்பட்ட அக்கிரு (Acra) மோரியா (Moriah) என்னும் மலைகளின்மேல் பூர்வீக சாலேம் கட்டப்பட்டதென்று நினைக்கிறார்கள். யெபூசியர் இதைக் கையாடினபொழுது பட்டினத்திற்குத் தெற்கே ஒரு கோட்டையைக்கட்டி அதற்கு யெபூசென்று பெயரிட்டார்கள். பிற்காலத்தில் சீயோன்மலையென்று அழைக்கப்பட்டது. இதைச்சுற்றியிருந்த நகரங்களை இஸ்ரவேலர் யோசுவாவின் நாட்களிற் பிடித்தார்கள். இதுவோ யெபூசியர் கையிலேயிருந்தது. தாவீது தனது காலத்தில் இதைப்பிடித்து எபிரோனைவிட்டு இவ்விடத்தில்வசித்தான். அதினால் தாவீதின் நகரமென்று பேராயிற்று. இப்பட்டினம் யூதாக்கோத்திரத்துக்கும் பென்யமீன் கோத்திரத்துக்கும் இடையேயுள்ள எல்லையிலிருப்பதால் இருகோத்திரத்தாருக்கும் உரிமை என்பதாகச் சிலவிடங்களிற் சொல்லப்பட்டிருக்கின்றன.

(இன்னும்வரும்.)

## நல்லோருக்குந் தீயோருக்குமுள்ள வித்தியாசம்.

தேவபத்தரிலும் துன்மார்க்கரே பெரும்பான்மைபற்றிச் செழிக்கிறார்கள். எவ்வகையெனில், பிரதான ஆசாரியர்களும் பரிசேயரும் தங்கள்தங்கள் வீடுகளில் வாசம்பண்ணினார்கள். ஆனால் தலைவைக்கவுமிடமில்லாத யேசுவானவரோ ஒலிவமலைகளில் வாசம்பண்ணினார்.



மான்.

உலகத்தில் நாற்பதுவகை மானுண்டு. மான் காடுகளிலும் சோலைசெறிந்த வனங்களிலும் நடமாடிப் பரந்துதிரிகின்றது. அதின் வேகமுந் திடமும் அதின் உருவத்துக்கு நிகரல்ல. அதை வேட்டையாடுவோர் மிகுந்த சந்தோஷங் கொள்வார்கள். நல்ல ருசிகரமான இறைச்சி. தோல் மிகவும் விலைபெற்றது. சகல ஆண்மான்களுக்குங் கொம்புண்டு. பெண்மான்களுக்கில்லை. கலைமான் வகையிற் பெண்மானுக்கு மாத்திரங் கொம்புண்டு. அநேகவகை மான்கள் வருஷவீதமாகக் கொம்புகழற்றுகின்றன. அதுவுமன்றிக் கொம்புகள் குறித்தகுறித்த காலங்களிற் பருத்து வளருகின்றன. பல கவர்களாகக் கொம்புகள் கிளைத்து நாலுபக்கத்திலும் நிற்கின்றன. சில நிமிர்ந்தும் சில பக்கஞ்சாய்ந்தும் சில கீழ்ப்புறமாகவும் முளைத்து அவைகளின் சௌந்தரியத்தை அதிகப்படுத்துகின்றன.

மான்வகையில் அதிபருப்பமும் பெலனுமுள்ள மூஸ் (Moose) என்னும் வகைமான் ஐரோப்பா அமரிக்காத்தேசங்களின் வடபுக்கங்களிற் காணப்படுகின்றது. அது நாலரைஅடி துவங்கி ஆறடி உயரமுள்ளது. அது குட்டியாகவிருக்குங்காலத்தில் செங்கல்மஞ்சளான நிறமுள்ளதாகவிருந்து வயதுசெல்லச்செல்லக் கருமைநிறங் கொள்ளும். கவர்விட்டுப் போகும் கொம்புகள் அந்தங்களில் எட்டுப்பத்தடி தூரத்திற்கு ஒன்றைவிட்டொன்று பிரிந்திருக்கும். அவைகளின் நிறை ஐம்பது அறுபது இறாத்தல் நிறையாகவிருக்கும்.

வட்டக்கொம்புள்ள வேறொருவகையான மான் (Round horned elk) வட அமரிக்காவிற் காணப்படுகின்றது. இது ஏறக்குறைய மூஸ் வகையான மானைப்போலிருந்தும் மிக அழகிய ரூபமுள்ளதும் வட்டக்கொம்புள்ளதுமாயிருக்கின்றது. எல்க்கு (Elk) வகையான மான்களைப் பழக்கிக்கொள்ளலாம். சாதாரண மான்களைப்போல எல்க்கு வகையான மான் வயது செல்லச்செல்லத் தொந்தரவுள்ளதும் மோசத்தை வருவிக்கிறதுமாயிருக்கின்றது.

பென்சில்வானியா (Pennsylvania) நாட்டிலுள்ள ஒரு துரைமகன் இரண்டு எல்க்கு வகை மான்களை வளர்த்தார். இவர் இவைகளைப் பார்க்கப்போகும் வேளைகளெல்லாம் அப்பத்துண்டுகளை அல்லது கைநிறைந்த தானியங்களைக் கொண்டுபோய்க் கொடுப்பார். ஒரு நாள் ஒன்றுங் கொண்டுபோகாதபடி அவைகள் நிற்கும் பக்கலாகப் போனவேளையில் ஆண்மான் அவரைப் பின்றொடர்ந்து அலைக்கழித்துப் போகவிடாமற் றடைசெய்தது. அப்பொழுது துரைமகனுக்குக் கோபமுண்டாய் ஒரு சிறுகுச்சுத்தடியால் அதைச் சுள்ளிட அடித்தார். அச்சணமே தன் தலையைக் குனிந்து தன் கொம்பினால் பீறும்படி வகைபார்ப்பதைத் துரைமகன் கண்டு, ஒட்டம்பிடித்து விழுந்துகிடக்கும் இரண்டு மரக்குற்றிக்கிடையேபோய் ஒதுங்கிக்கொண்டார். மானுமோ அவரைச் சருவும்படி போய்த் தன் கொம்புகளால் அவரைத்தாக்க கொம்புகள் அவரிற் படாமல் மரக்குற்றிகளிற் பட்டன. இவ்விதமாக ஒருமணித்தியாலமாக மாய்ச்சல்பண்ணி அவரை மறித்துக்கொண்டது. அவர் தப்பிக்கொண்டு அதைக்கொல்லும்படி கட்டளையிட்டார்.

லாப்லாந்து தேசத்திலுள்ள றெய்ண்டியர் (Reindeer) வகைமானைப்பற்றி முன்னொருசங்கியையிற் சொன்னதினால் இவ்விடத்தில் அதைச் சொல்லவேண்டிய அவசியமில்லை. அநேகவகை மான்களைப்பற்றிய விவரஞ் சொல்வதற்கு இடமில்லை. திபேத்துதேசத்தில் கஸ்தூரிமானுண்டு. கஸ்தூரி, இவ்வகை மான்வழியாகவே பெற்றுக்கொள்ளுகிறது. முயலுயரமுள்ள பலவகைமான்கள் தென் ஆசியாவைச்சேர்ந்த தீவுகளிலுண்டு.

(இன்னும்வரும்.)

## சரியாகத்துவங்கு.

லண்டன் பட்டினத்திலுள் குற்றவாளிகளைப்பற்றி ஒரு துரைமகன் சொல்லுகிறதாவது, எட்டுவயதிற்கும் பதினாறுவயதிற்குமிடையிற் துன்மார்க்கமாக நடந்தவர்களே பெரும்பாலும் இந்நகரத்திற் குற்றவாளிகளாக விருக்கிறார்கள். இருபது வயதுமட்டுக்கும் ஒருவன் நல்லவனாக நடந்தால் அவன்செய்த ஐம்பதுகாரியத்தில் ஒருகாரியம்மாத்திரமே வழுவாகவிருக்கும்.

பிள்ளைகளே, சரியாகத் துவங்குங்கள்; நற்பழக்கத்தைப் பயிலும் பக்குவகாலத்திற் துற்பழக்கத்தைப் பயின்று கெட்டுப்போகாதேயுங்கள்.

## சிறுபிள்ளையின் பிரார்த்தனை கேட்கப்பட்டது,

ஒரு வறியவிதவைக்கு ஐந்து பிள்ளைகளிருந்தார்கள். ஒருநாட் காலைப்போசனத்திற்குத் தனவசம் ஒன்றுமில்லாததினால் பிள்ளைகளைப்பார்த்து எனதருமையான மக்களே, இன்று காலைப்போசனத்திற்கு ஒன்றுமில்லை. அப்பமில்லை, மாவில்லை, ஒரு முட்டைதானுமில்லை, நான் இனிமேல் உங்களுக்கு உழைத்துத்தர என்னால் முடியாது; கிருபாகரராகிய தேவனை நோக்கி எங்களுக்குதவிசெய்யும்படி பிரார்த்தியுங்கள். அவர் சம்பூரணரும் வல்லவருமாயிருக்கிறார். ‘‘ஆபத்துக்காலத்தில் என்னைநோக்கிக் கூப்பிடு நான் உன்னை விடுவிப்பேன், நீ என் மகிமையைப் பிரகாசிப்பிக்கப் பண்ணுவாயென்றார்’’ என்பதாகச் சொல்லியிருப்பதால் அவரை நோக்கிக் கேளுங்களென்று சொன்னாள்.

அவளுடைய ஆறுவயசுள்ள சிறு பெண்பிள்ளை பட்டினியாகத் துக்கத்துடன் பள்ளிக்கூடத்துக்குப் போகையில் தெருவின்பக்கலிலிருந்த தேவாலயந் திறந்திருக்கக்கண்டு அதற்குட் புகுந்து ஒருமூலையில் நின்று முழந்தாட்படியிட்டு ஆரும் நிற்கிறதோவென்று சுற்றிப்பார்த்து ஒருவரையுங் காணாததினால் தன்ஆவல் தீருமட்டும் பெருங்குரலிட்டுப் பிரார்த்தித்தான். அவள்பண்ணிய பிரார்த்தனையாவது, பரமண்டலத்திலிருக்கும் என் அருமைப் பிதாவே, எங்களுக்குப் போசனமில்லை. எங்கள் தாயார் எங்களுக்குக் கொடுப்பதற்கு அப்பமில்லை, நாங்களும் எங்கள் மாதாவும் பட்டினியாயிறந்துபோகாதபடி ஏதும் எங்களுக்குக் கொடுத்தருளும், ஆ கர்த்தாவே, எங்களுக்குதவும், நீர் நிறைவுள்ளவரானதால் எங்களுக்கு லெகுவாயுதவிசெய்யும், நீர் வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறீர், உமது வாக்குப்படி நிசமாகவே செய்வீர் என்பதாகப் பிரார்த்தித்து தளர்நடையாகப் பள்ளிக்கூடத்திற்குப்போய், மறுபடி திரும்ப வீட்டுக்குப்போய் பீடத்தைப் பார்க்கையில் ஒரு பெரிய அப்பமும் ஒரு பாத்திரம் நிரம்பிய இறைச்சியையும் ஒருபெட்டி நிரம்பிய முட்டையும் இருக்கக் கண்டு, ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் என் செபத்தைத் தேவன் கேட்டாரென்று அக்களிப்பாகச்சொல்லி, தாயே, ஒரு தேவதூதன் கொண்டுவந்து சாளரவாயிலில் வைத்தானா என்று கேட்டாள்.

இல்லை மகனே, தேவன் உனது பிரார்த்தனையைக் கேட்டார். நீ செபம்பண்ணுகையில் உன் கண்ணுக்கு எட்டாமல் நின்ற ஒரு சீமாட்டி நீ

சொன்ன பிரார்த்தனையைக்கேட்டு இவைகளை எங்களுக்குத்தந்தது. தேவன் அவர்களைக்கொண்டே எங்களுக்குதவினார் என்று சொன்னான். பிள்ளைகளே, ஆபத்தில் தேவனை நோக்குங்கள், அவர் உங்களுக்கு உதவுவார்.

## யேசுவுடனிருத்தல்.

ஒய்வுநாட் பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயர் ஒருமுறைதிபேரியாக்கடலில் கிறிஸ்துவும் அவருடைய சீஷரும் படவிலிருப்பதையும் காற்றும் முரங்கொண்டடிப்பதினால் கடல் கொந்தளித்து அலைகள் படவில் மோதுகிறதையும் விளக்கும் ஒரு படத்தைப் பிள்ளைகளுக்குக் காட்டினார். அப்பொழுது ஒருபிள்ளை சொன்னது ஆ! எவ்வளவு கடும்புயல்! அந்நேரம் நான் அந்தப் படவிலிராததற்காக மிகுசந்தோஷம் என்றான். இவ்விதமாகவே பல பிள்ளைகள் ஒருவரொருவராகச் சொன்னார்கள். அவ்வேளையில் மிகச்சிறிய ஒரு பிள்ளை ஆ! நான் அந்தப் படவிலிருந்தால் மிகவுஞ் சந்தோஷம் என்றான். மற்றப்பிள்ளைகள் ஏன் அப்படிச் சொல்லுகிறாயென்றதற்கு யேசுக்கிறிஸ்து அதிலிருந்தால் அப்படிச் சொல்லுகிறேனென்றான். இதுதகுந்த உத்தரமல்லவா? யேசு அப்படவிலிருந்ததினால் அது தாழமாட்டாது. பிள்ளைகளே, யேசுவுடனிருப்பதால் ஒருமோசமும் வராது. அவரே உனது பற்றுக்கோடு.

## பொய்க்குத் தண்டனை.

சியம் தேசத்தில் பொய்சொன்னதாக ஒருவன் காணப்பட்டால் அத்தேசத்தின் பிரமாணப்படி அவன்வாய் தைக்கப்படவேண்டும். இது எவ்வளவு கடுமையான தண்டனை. ஆனால் இந்தேசத்தில் அப்படிப்பட்ட பிரமாணமொன்றுண்டானால் எத்தனை பேருடையவாய் தைக்கபடாமலிருக்கும். அன்றியும் பொய்சொல்லுவோரின் வாயை அதரிசனமான ஊசிநூலினால் தைக்கப்பட்டிருக்குமேயானால் திறந்த வாயையுடையவர்களாக எத்தனைபேரை நாம் காண்போம். இதை வாசிக்கும் பிள்ளைகளே, உங்களை உற்றுச் சிந்தியுங்கள். உங்களிற் சிலர் பொய்சொல்லாதிருந்தால் அதை முற்றமுடியக் காப்பாற்றுங்கள். பலர் பொய்சொல்லியிருந்தால் உங்களுக்குவருந் தண்டனை என்ன? பொய்பேசும் உதடுகளைத் தேவன் அருவருக்கிறார். பொய்யரனைவரும் இரண்டாம் மரணத்தை அடைவார்கள்.

## என்னபிரிக்கக்கூடும்.

கிறிஸ்துவைநேசித்த ஒரு சிறுவன் தனதுவீட்டுக்குவந்த ஒரு விருந்தனை நோக்கி, கிறிஸ்துவை நேசிப்பதினால் தனக்குள்ள மனப்பாக்கியம் மிகுதியென்றான். அப்பொழுது விருந்தன் சிறுவனை நோக்கி, இங்கே தன திரவியமுள்ள ஒருசீமாட்டியிருக்கிறாள். அவளுக்குப் புத்திரபாக்கியமில்லை. அவள் இப்பொழுது உன்னிடம்வந்து நீ கிறிஸ்துவை விட்டுப் பிரிந்தால் எனது பெரிய மச்சுவீட்டையும், எனது காணிபூமிகளையும் என்னிடமுள்ள சகல திரவியங்களையும் உனக்கிப்பொழுது தருவேனென்றுசொன்னால் நீ கிறிஸ்துவைவிட்டுப் பிரியமாட்டியா? என்றுசொல்ல, சிறுவன் விருந்தனை ஏறஇறங்கப்பார்த்து என்ன! கிறிஸ்துவைவிட்டுப் பிரியட்டா? ஒருக்காலும் விட்டுப் பிரியேன்! விட்டுப்பிரியேன்! இவ்வாக்குகளைக் கேட்ட விருந்தன் பிள்ளையை இருதயத்திலே வேற்றுமையடைந்தவனாகவும் யேசுவை நேசிக்கிறவனாகவும் கண்டான்.

## நித்தியம்.

பரிஸ் (Paris) இராசதானியிலுள்ள ஓர் பள்ளிக்கூடத்தில் நித்தியமாவதென்னவென்று கேட்டவிடத்தில் ஒரு பிள்ளை சொன்னது தேவனுடைய ஆயுள்நாளே நித்தியம்.

## கிளிகாட்டிக்கொடுத்த களவு.

இடப்பிளின் (Dublin) என்னும் பட்டினத்தில் ஒரு கிளி காட்டிக்கொடுத்த களவைப்பற்றி பிள்ளைகளே உங்களுக்குச் சொல்லுகிறேன். பொலிஸ் தலைவனாகிய மேயர் (Lord Mayor) துரைமகனும் இன்னுஞ் சிலருமாகக் கடைவீதிகளிலும சாப்புகளிலும் அப்பக்காரர் வீடுகளிலும் போய் அவர்கள் படிக்கல்லுகளையுந் தராசுகளையும் நாழிகளையும் சாமான்களையும் சரியாயிருக்கிறதோவென்று பரிசோதித்துப் பார்ப்பது வழக்கம். ஒரு அப்பக்காரனுடைய வீட்டிற்குள் மேயர் துரை புகுந்து அவருடைய அப்பங்களெல்லாம் சரிநிறையாயிருக்கிறதோவென்று நிறுத்துப் பார்த்துச் சரியாயிருக்கக் கண்டு திரும்புகையில் சாளரவாயலில் கூட்டிலடைக்கப்பட்டிருக்குங் கிளியானது "உள்ளறையில் கனமற்ற அப்பம், உள்ளறையில் கனமற்ற அப்பம்" என்று சொல்வதைத் துரைமகன் கேட்டுத் தானுந் தன்னுடன் கூடவந்தவர்களுமாக உள்ளறையிற் சென்று சோதித்துப்பார்க்கையிற் கிளியின் சொற்படியே வெகு அப்பமிருப்பதைக் கண்டு நிறுத்துப்பார்த்து கட்டளைக்கு விரோதமாகச் செய்யப்பட்டிருக்கும் பல நிறைகொண்ட அப்பங்களையெடுத்துக்கொண்டு போய்விட்டார்.



பிள்ளைகளே,

மேலே காட்டப்பட்டிருக்கிற படத்தில் ஒரு இராசா நியாயாசனத்திலிருந்து, தன் பட்டயத்தை நீட்டிக்கொண்டு தனக்கு முன்நிற்கிற சனங்களுடன் பேசுகிறதையும், ஒரு மனுஷன் தன் கையில் ஒரு பிள்ளையைப் பிடித்துக்கொண்டு, மற்றக்கையினால் வாளோங்கி அந்தப்பிள்ளையை வெட்டப்போகிறதையும், ஒரு ஸ்திரி தன் கூந்தலைக் குலைத்துக்கொண்டு இரு கைகளையும் விரித்துக்கொண்டு அலறி இராசாவின்முன் ஓடுகிறதையுங் காண்கிறீர்கள். இப்போ இதைக்குறித்துச் சிலதை உங்களுக்கெழுதுகிறேன்.

தாவீது இராசா மரித்தபின் அவனுடைய மகன், சலோமோன் இராசாவானான். அவன் இராசாவானபின் ஒருநாள் தேவன் தரிசனமாகி, நான் உனக்குத் தரவேண்டிய வரமென்ன, கேள் என்றார். பிள்ளைகளே, அப்போது சலோமோன் என்னகேட்பான்? தனக்கு அதிகமான ஐசுவரியத்தைத் தரும்படியா? தீர்க்காயுளையா? அப்படியல்ல. அவன் தேவனை நோக்கி, நானோ ஒரு சிறுபாலகன், நான் போக்குவரவுசெய்ய அறியேன், உமது தாசனாகிய நான், உம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும், மிகுதிபற்றி, எண்ணுக்குத் தொகைக்கும் அடங்காதவர்களுமாகிய உமது மகாசனங்களுக்குள்ளே இருக்கிறேன். ஆதலால் உமது சனங்களை நியாயம்விசாரிப்பதற்கும், நன்மை தீமைகளைப் பகுத்தறிவதற்கும், உமது அடியானுடைய மனதில் ஞானத்தைத் தந்தருளுமென்று கேட்டான். தேவன் உடனே மறுஉத்தரம் அருளினார். ௧. இராசா. ௩: ௫, ௰௩ வரைக்கும் வாசித்துப்பாருங்கள். சலோமோன் கேட்ட ஞானம் மாத்திரமல்ல, ஏராளமான ஐசுவரியமும், தீர்க்காயுளும், உலகத்தில் அவனுக்கு, முன்னும் பின்னும் எந்த மனுஷருக்கும் இல்லாத ஞானத்தையுங் கொடுத்தார். சலோமோனுடைய ஞானம் முதல்முதல், மேலே படத்திற் காட்டப்பட்டிருக்கிற இரண்டு வேசிகளின் வழக்கிற் தெரியவந்தது. எப்படியெனில், ஒருவீட்டில் இரண்டு ஸ்திரிகள் வாசமாயிருக்கும்போது, இருவரும் இரண்டு ஆண்பிள்ளைகளைப் பெற்றார்கள். சிலநாட்சென்றபின் ஒரு இரவில் எப்படியோ, ஒருத்தியுடையபிள்ளை இறந்துபோனது. அப்போ அவள் தன் மரித்தபிள்ளையை எடுத்து மற்றவளுடைய மார்பில் கிடத்திவிட்டு, அவளுடைய உயிரான குழந்தையைத் தான் எடுத்துத் தன் மார்பில் கிடத்திக்கொண்டாள். உயிருள்ளபிள்ளையின் மாதாவோ, தன் பிள்ளைக்குப் பாலைக்கொடுக்க எழுந்து பார்த்தபோது அது செத்திருந்தது. விடிந்தபின் அவள் நன்றாய் உற்றுப்பார்த்தபோது, அது தான் பெற்றபிள்ளையல்லவென்று கண்டாள். இரண்டுபேருக்கும் விவாதம் உண்டானது. தங்கள் வழக்கைத்தீர்க்கும்படி இராசாவிடம் வந்தார்கள். இராசாவுடைய சமூகத்திலும் நின்று உயிருடன் இருப்பது என் பிள்ளை, செத்தது உன் பிள்ளை என்று ஒருத்தி சொல்ல, மற்றவள் இல்லை, உயிருடன் இருப்பதுதான் என்பிள்ளை, செத்ததுதான் உன்பிள்ளையென்று சொல்லி, இப்படியே வாதுபண்ணினார்கள். பின்னை இராசா என்னசெய்யக்கூடும். மேலே படத்திற் காட்டப்பட்டிருக்கிறபடி, இராசா ஒரு கட்கம் வைப்பித்துத் தனக்கு முன்னின்றவர்களிடங் கொடுத்து, உயிரோடிருக்கிற பிள்ளையைத் துண்டித்து, ஆளுக்குப் பாதியாய்க் கொடுக்கச்சொன்னான். அப்பொழுது படத்திற் காட்டியிருக்கிறபடி, உயிரோடிருக்கிற பிள்ளையின்மாதா, தன் பிள்ளையினிமித்தம் வயிறெரிய அலறி, இராசாவை நோக்கி, ஐயோ! என் ஆண்டவனே, உயிரோடிருக்கிற பிள்ளையை இவளுக்குக் கொடுத்துவிடும். எவ்விதமும் அதைக்கொல்லவேண்டாமென்றாள் மற்றவளோ அது எனக்கும் வேண்டாம், உனக்கும்வேண்டாம், சேதித்துப்போடுமென்றாள். அப்போது இராசா, அந்தப்பிள்ளையின் நிமித்தங் கலங்கி அலறினவளே அதின் மாதா என்பதை அறிந்து, அவளுக்கே உயிரானபிள்ளையைக் கொடுத்தான். இராசா தீர்த்த நியாயத்தீர்ப்பை இஸ்ரவேலர் அனைவருங் கேள்விப்பட்டு நியாயம் விசாரிக்கிறதற்குத் தேவன் கொடுத்த ஞானம், இராசாவிடம் இருக்கிறதைக் கண்டு பயந்தார்கள்.

பாருங்கள் பிள்ளைகளே, எந்த வரமுந் தேவனாலேயே உண்டாகின்றன. நீதிமானுடைய உண்மையான செபம் எவ்வளவு சித்திபெறும். சலோமோன் ஒரேயொரு காரியத்தைக் கேட்டான். எல்லாவித வரங்களும் சலோமோனுக்கு அருளப்பட்டது. தேவனுடைய சித்தத்திற்கேற்கப் பிரார்த்தியுங்கள். சந்தேகமின்றிப் பலன் பெறுவீர்கள்.

## இரண்டுபாக்கியம்.

ஒருவன் விரும்புகிறதெதுவோ அதை அடைந்து அனுபவிப்பதே பாக்கியம் என்று ஒருவன் ஒரு ஞானிக்குச்சொல்ல, அந்த ஞானி அதற்குப்பதிலாகத் தனக்கில்லாததை இச்சியாமலிருப்பதுவே பெரும்பாக்கியமென்று சொன்னான்.

## தரித்திரம்.

வறுமையினாற் கஸ்திப்பட்டு மனநோவுள்ளவனாயிருக்கும் ஒரு இளைத்தவனைப் பார்த்து பதினொரு வயதுள்ள ஒரு சிறு பெண் சொன்னது, கேளும், சின்னக்காசுமில்லாத ஒருவன்மோட்சத்துக்குப் போக இடமுண்டு ஆனால் இருதயத்தில் தேவகிருபையில்லாதவன் போகமாட்டான் என்றாள். மோட்சம்போவதற்கு பாவத்தைவிடு. மனஸ்தாபப்படு. யேசுவைத்தேடு.

## சத்தியவேதக்கேள்வி.

கூம் பாடம்.

க. மாதளமரத்தின் கீழ் தரித்துநின்றவனார்? க. சாமு. ௰௪: உ.

உ. அல்லோன் பாகுத்தென்ற அல்லோன்மரத்தின்கீழ் அடக்கம்பண்ணப்பட்டதார்? ஆதி. ௩௫: அ.

ங. பேரீந்துமரத்தின்கீழிருந்து இஸ்ரவேலரை நியாயந்தீர்த்ததார்? நியா. ச: ௫, ரு.

ச. இரட்சகர் பட்டுப்போவென்றுசொன்ன மரமென்ன? மத். உக: ௰௯.

ரு. சக்கேயு எறினமரத்தின் பேரென்ன? அவன் ஏறின முகாந்தரமென்ன? லூக்கா. ௰௯: உ, ௪.

சா. முட்செடிகளையும் முட்பூண்டுகளையும்பற்றி முதற் சொல்லப்பட்ட இடம் எங்கே? ஆதி. ௩: ௰௮.

எ. திராட்சக்கொடிக்கு நிகரானவராா? யோவா. ௰௫: ௧, ௫.

அ. ஒருகாலத்தில் ஒருமரத்தின் கீழ் காதணிகள் நிலத்திற் புதைக்கப்பட்டன. என்னமரத்தின்கீழென்றும் ஆர்புதைத்தது என்றுஞ் சொல்லக்கூடுமோ? ஆதி. ௩௫: ௪.

கூ. தெவுல் எந்தமரத்தின்கீழ் புதைக்கப்பட்டான்? க. சாமு. ௩௧: ௰௩.

௰. ஒரு மரத்தின்கீழ் தன்னிடம்வந்த விருந்தரை உபசரித்து இளைப்பாறச் செய்ததார்? ஆதி. ௰௮: ௧, ௪.

## காத்திரமுள்ள வினு.

ஒரு குருவானவர் தமது சபையாரை முறைமுறையாக சந்தித்துவருகையில் ஒரு சபையாருடைய வீட்டில் ஒருநாள் போசனம்பண்ணும்படி அழைக்கப்பட்டார். அவ்வேளையில் வீட்டெசமான் அவரைப் பந்தியில் உட்காரவைத்துத் தேவ ஆசீர்வாதங் கேட்கச்சொல்ல, அவர் அப்படியே கேட்டார். அப்பொழுதுஐமூவயசுள்ள ஒரு சிறுவன் தன் பிதாவை நோக்கி, அப்பு, குருவானவர் நம்முடன் புசிக்கும் வேளைகளில் மாத்திரம் தேவாசீர்வாதங் கேட்பது என்ன? மற்றும் வேளைகளில் ஏன் அப்படிக் கேட்கிறதில்லையென்ற காத்திரமுள்ள வினுவைக் கேட்டான்.

எனது அருமையான பிள்ளைகளே,

உங்களில் அநேகர் கிறிஸ்தபெற்றோரின் புத்திரராக விருப்பதினாலும் இளைஞர் கிறிஸ்தசங்கத்தைச் சேர்ந்தவர்களாக விருப்பதினாலும் வேதவாக்குகளில் அப்பியாசம்பண்ணிவருவதினாலும் உங்களிடத்தில் ஒரு கேள்விகேட்க விரும்புகிறேன். அந்தக் கேள்விக்கு நீங்கள் எனக்கு விடைஅனுப்ப வேண்டியதில்லை. தயவுபண்ணி உங்கள் விடைகளை உங்கள் போதகரிடம் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அவர் அவைகளைப் பார்த்துச் சரியோ பிழையோவென தீர்த்து உங்களுக்குத் தகுந்த புத்திகளையும் ஊட்டுவாரென்று நம்புகிறேன். கேள்வியாவது, சத்தியவேத புத்தகத்தில் கிறிஸ்துவைக்குறிக்கும் நாமங்களெவையென்று நீங்களொரு துண்டுக்கடுதாசியில் எழுதி உங்கள் போதகரிடங் கொடுக்கும்படி கேட்கிறேன்.

இப்படிக்கு, அ. ஆ.
மானிப்பாய் சித்திரை மாதம் ௰௪ ந் திகதி.

## சாராயவியாபாரி.

ஐந்குறைய பதினைந்து வருஷத்திற்குமுன் மேன் (Maine) என்னும் மாகாணத்திலுள்ள ஒரு சாராய வியாபாரி இறந்துபோனான். அவன் வயதிலே விருத்தனும் பாவத்தில் நெடுநாட்பயிற்சிக்காரனுமாக விருந்தான். பாவத்தினுற் தேடிக்கொண்ட தனது சம்பாத்தியத்தை அநுபவிக்கும்படிக்கும் தனது தீமைகளிற் பயிலும்படிக்கும் அவனுக்கு வளர்ந்த ஒரு வாலிபனிருந்தான். இவனே தன் பிதாவினிடத்திற்கு சுதந்தரவாளியாய் அவன் செய்துவந்த வேலையைச் செய்துவந்தான். இந்த வாலிபனுக்கு ஒரு வசதியான வீடுண்டு. இவன் நாலுபுத்திரருக்குப் பிதாவாயிருந்தான். சிறிதுகாலமாக மட்டாக இவன் குடித்துவருவதினுல் சகலருடனும் நல்லாகச் சாவகாசம்பண்ணிவந்தான். இப்படியிருக்குங்காலத்தில் தேவன் இவனைத் தொட்டார். இவன் மரணத்துக்கேதுவானவனாக வந்தான். மரணத்தறுவாயில் தனது மனைவியைப் பக்கத்தில் நிற்கச்சொல்லி, "நான்சாகிறேன், நான் கெட்டேன், நான் தாமதித்ததுபோல நீயுந் தாமதியாதே, உன் ஆத்தும இரட்சண்ணியத்தைப்பற்றி இப்பொழுதே நீ தீர்த்துக்கொள்" என்று சொன்ஞன். இவ்வார்த்தைகளைக் கேட்குஞ் சமையத்திலும் அவள வெறித்தவளாக நின்றாள். அவன் சொன்ன புத்திகளைக் கேட்கையில் தன் மூக்கைநெறித்து கையாண்டிபண்ணினுள். தனக்கும் பிறருக்குமாக அவன்செய்த செய்கைகளைப்பற்றி நெடுந்தூரம் வைதாள்.

தனக்குவைத்தியஞ் செய்துகொண்டுநிற்கும் தேவபத்தனுகிய பரிகாரியைப்பார்த்து, "எனக்காகப் பிரார்த்தனைசெய்யும்" என்றான். தேவனுடைய நாமத்தை ஒருபொழுதும் பயபத்தியுடன் உச்சரியாத வீட்டில்நின்று பிரார்த்தனை செய்யப்பட்டது. சாராய வியாபாரிக்கு யாதொரு அருளின் கிரணங் காணப்படவில்லை. தேவனே என் ஆத்துமாவுக்கு இரங்கும் என்ற பயங்கரசத்தம் உண்டுபட்டது. அவன் மனைவியும் பக்கத்தில் நின்று தளம்பினுள். பக்கத்தில் நின்றவர்கள திகில்கொள்ளத் தக்கவிதமாய் அவனுடைய ஆத்துமா தேவசமுகஞ் சென்றது.

## பஞ்சமாபாதக தருப்பணம்.

(கட்டளைக் கலித்துறை.)

செப்பிடும்வார்த்தையுஞ் செய்யுங் கிரிசையுஞ்சேரிடமும்
ஒப்புரவாகவுடுத்தியசீலையுமுண்ணுமவைத்
தப்பறையென்றுஞ் சரியென்றறியத்தகுதியியா
துப்புள்ள கள்ளைக்குடியாதுகாருஞ் சுருதியோனே.

என்றது போல பேசுவது இன்னதென்றும் செய்வது இன்னதென்றும், தானிருப்பதுஞ் செல்வதுமெங்ஙனமென்றும், உடுத்தியசீலைகிரமமாகவிருக்கிறதோ இல்லையோவென்றும் உண்பது அன்னமோ மண்ணோவென்று சற்றுவது பகுத்தறியக்கூடாத மூடவறிவையீகின்றதுமன்றி தனதருமையான மித்திரர்களென்றும் மற்றோர்களென்று மறியக்கூடாதவறிவை ஈகின்றன. ஐயோ! என்னருமைப் பாலியரே,

கட்டளைக் கலித்துறை.

தாயோடுதங்கை தமையானவெச்சந் தனதுமங்கை
நாயோடு நஞ்சுநகையானகுளை நகை திரையான்
பேயோடு பன்றுப பறையென்று சற்றும்பகுத்தறியாத்
தீயோடுமிக்கத்துணியியும் பார்கெட்டதேன் வெறியே.

என்றதுபோல வெறியால் மோசம்போவதை வரையக் கைகூசுகின்றதே. நினைக்கப் பயங்கரங்கொள்ளுதே. நவிலநாவிடங்கொடுக்கவில்லையே. ஐயோ! பாலியர்களே, இப்போற்கொத்த மானிடதொழிலுக்குச் சற்றுந் தகாதஇயல்பைத் தருகிறதுமன்றி தாதை மூதாதைமுதத்தாலுங் கஸ்டப்பட்டுத் தேடிய தனமும் அருமையான தொழிலோடு உத்தியோகமும் இழந்து, கட்டிய வஸ்திரமும் தனது பெண்டீரின் மங்கிலியமும் விற்றுக் குடிக்கும்படியாகத் தூண்டிவிடுகின்றன. அல்லாமல் பெற்றோர் முதல் உற்றுருறவின்முறையாரும் ஊராரும் சிச்சி மடையன் மிலேச்சன் குடியன் வெறியன் மானிடப்பதர் என்று இகழ்ந்து பேச விடத்தையுண்டுபடுத்துவதுமன்றி ஒரு சல்லிக்கு கம்பத்தக்கதான இயல்பைக் கெடுத்துவிடுகின்றன. அன்றியும்,

நேரிசைவெண்பா.

ஐயோகோாதா அவனியிற் கட்குடியால்
மெய்யறிவு மேனிமிகக்கெட்டு—கையோடு
காறுமசவெடுத்துக்கண்ணெரிவுமீவதால்
ஞாலமதிற்றன்னவருள்.

என்றதுபோல காலெரிவு கண்ணெரிவு முதலான துன்பத்தை வருவித்து காலத்தைச் சுருக்கில் முடிவிக்கின்றன. ஐயோ! இச்செய்கையால் இப்பூமண்டலத்தில் மோசம்போனோர்கள் ஏராளமுண்டல்லவோ? அன்றியும் இவ்வெறியால் வீதியில் நாய் கிடப்பதுபோல கிடப்பதும் சேவகர் தாடையிலறைந்து சாவடிக்குக் கொண்டுபோய் மாட்டுவதுங் கண்டிருப்பீர்களே. ஆகையால் பொருளைக் கொடுத்து அருளைத் தேடுவது கீர்த்தியோ? நரகுக்காளாவதுகீர்த்தியோ? ஆ! என்னருமைப்பாலியரே,

உட்கப்படாஅரொளியிழப்பரெஞ்ஞான்றுங்
கட்காதல்கொணடொழிகுவார்.

என்று நாயனுரருளிய மொழிபோல நாம் அருளையிழந்துவிடுவதோ கீர்த்தி. இதுவோ மானிட அறிவுக்கு நேர்த்தி. அன்றியும், நயம் வரும்படிக்கு வணிகன் நாடுவானே நட்டமடைய நாடுவானே? ஒருக்காலும் நட்டத்துக்காளாகாமல் காப்பானல்லவோ? அவ்வாறிருக்க நாம் இவ்வுலகில் தேடவேண்டிய அவசியப்பொருள் யாது. ஐயோ பாலியரே மதுபானஞ் சக்கந்தமுள்ளதும் லோட்டியமளியுள்ளதுமாயிருக்கின்றன. அதிலே மயங்கிற எவனும் ஞானியாவதில்லை. சாலோ. உ௰: க. என்று தாவீதுராசனின் புத்திர சிகாமணியாகிய சாலோமோன்வாக்கியத்தின்படிக்கு நாமனுசரித்தால் அஞ்ஞானியாகிப் பதவியைக் கைசோரவிட நேரிடுமல்லவோ? ஆகையால்நாம்இக்கிரிகைக்காளாகாமற் தப்பித்துக்கொள்ளவேண்டியதவசரம்.

இப்படிக்கு, சிங்கப்பூர்ச் சராங்கோங்ரோட்டானுகிய பாலியர் பிறியன்.

(இன்னும்வரும்.)

## தேவஸ்துதி.

நேரிசை வெண்பா.

அணுவுக்கணுவான அச்சுதனே தேவா
மனுவுக்குநீரல்லால் மண்ணில்—நினவுக்குக்
காணேன்காண்வேறு கருணைகூர்ந்தென்றுயரைப்
பானேறத்தோயம்போற் பாரு.

தீபதைக் கண்ணிகள்.

இராகம் நீலாம்புரி. தாளமாதி.

க. பாவியிலும்பாவி படுபாவியெனையல்லாற்
பாரினிலுண்டோசருவ காருண்ணியனே.
காவலர்சொற்களை நாடாத பாவியான
நகமெல்லாநின்ற சருவ காருண்ணியனே.
உ. கொலை களவு பொய் குருநிந்தைவிபசாரங்
குடிகொண்டோன்யானேசருவ காருண்ணியனே
கலையுணராதமூடன் கவியறியாதசேடன்
களிகொள்ளுந்தீதன்சருவ காருண்ணியனே.
ங. அச்சமில்லாதபாவி யிச்சைநிறைந்தஆவி
அடியன்போலுண்டோ சருவ காருண்ணியனே.
பிச்சையிடாத தோஷன் புண்ணியமறியாவேஷன்
பேயனும்யானே சருவகாருண்ணியனே
ச. காமம்லோபமோடுகுஞ்சினங்கொணடமாகா
கடைமூடன்யானேசருவகாருண்ணியனே.
கேமகிட்டையாயநின்னை நினையாதபாவியான
நிசமிதுசொன்னேன் சருவகாருண்ணியனே.
ரு. பூமிக்குப்பாரமும் பருக்கைக்குக்கேடுமாய்
புவியில்வந்தேன்சருவகாருண்ணியனே.
சாமியடியேன்செய்த பிழைகளெல்லாம்பொறுத்துதாக்காத்தருள்வீர்சருவகாருண்ணியனே.

இப்படிக்கு, சிங்கப்பூர்ச் சராங்கோங்ரோட்டானுகிய பாலியர்பிறியன்.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.